www.tamilarangam.net



### இந்திய ராணுவம் வர தேவை இல்லை

# எங்களை அங்கீகரித்தால் போதும் விடுதலை நாங்களே பெற்று கொள்கிறோம்

## தமிழ் ஈழ போராட்ட தளபதி முகுந்தன் பேட்டி

பெங்களூர் மே,16—.

இந்தியா எங்களை அங்கீகரித்தால் போதும்ராணுவம் தேவை இல்லை முடிந்தால்ஆயுதம் தரட்டும் எங்கள் விடுதலையை நாங்களே பார்த்துக் கொள்வோம் என்று தமிழ் ஈழ மக்கள் விடுதலை கழக தளபதி முகுந்தன் கூறினார் அவர் இன்று பெங்களூர் தமிழ்சங்கத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்

பேட்டியில் தமிழ்ஈழ போராட்டம் பற்றி அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-



நாங்கள் திடீர் என்று ஒரே நாளில் முடிவுஎடுத்து ஆயுதம் ஏந்தவில்லை பல முறை எங்கள் தலைவர்கள் சிங்கள ஆட்சியாளருடன் பேசி தோல்வி கண்டனர் சின்னச் சின்ன சலுகைகளை அறிவித்து ஆட்சியாளர்கள் எங்களை ஏமாற்றி வந்தனர் முதலில் எங்கள் மொழியில் கைவைத்தவர் படிப்படியாகசட்ட சமாதானத்துடன் நாங்கள் புறக்கணிக்கப்பட்டோம் இரண்டாந்தர குடிமக்கள் ஆனோம் மனித உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டது துப்பாக்கிச்சூடுகள் தொடர்ந்ததுதமிழர் பலர் சொந்தநாய் நிலத்தில் தமிழ் ஈழத்தில் உயிர் இழந்தனர்

வேறு வழி இல்லாமல் நாங்கள் துப்பாக்கி ஏந்தினோம் போராட்டத்தை நாங்கள் தேடிப் போகவில்லை காலத்தின் கட்டாயத்தில் தள்ளப்பட்டோம் சிங்கள இனவெறி ஆட்சியாளருக்கும் தமிழருக்கும் இடையே நடைபெறும் போர் வேறு வார்த்தையில் சொல்வதென்றால் ஆதிக்க வாதிகளுக்கும் பாதிக்கப் பட்டவர்களுக்கும் இடையே நடைபெறுகிற போராட்டம் ஆகும் முதல் கட்டபோராட்டம் ஆரம்பம் ஆகிவிட்டது

எங்கள் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் வகையில் தான் நாங்கள் கொரில்லா தாக்குதலை அவ்வப்போது நடத்துகிறோம் ஆனால் இந்த கொரில்லா தாக்குதலில் மட்டுமே விடுதலை வந்துவிடாது

நாங்கள் ஒரு மாபெரும் முழுயுத்தம் மக்கள்யுத்தம் நடத்த திட்டமிடுகிறோம் முதலில் எங்கள் மக்களை அரசியல் மயப்படுத்துகிறோம் கிராமங்கள் தோறும் குழுக்கள் அமைக்கிறோம் இதில் 4 பிரிவுகள் உண்டு விவசாயிகள் பிரிவு பெண்கள் பிரிவு மாணவர் பிரிவு நிலமற்றோர் பிரிவு என நாலுவகை குழுக்களை அமைத்து அவர்களுக்கு பயிற்சி அளிக்கிறோம்இந்த வகையில் தமிழ் ஈழம் விடுதலைபெற மக்கள் இயக்கம் ஒன்றைதயார் செய்கிறோம் மக்கள்மூலம் மக்களிடம் அதிகாரம் வரவேண்டும் அதற்கான போர் முறை தான்நாங்கள் வகுத்திருப்பது

நாங்கள் ஆயுதம் ஏந்தி இருப்பது தற்காப்புக்குத்தான் மக்களை பாதுகாக்கத்தான் அடுத்தவர்களை அப்பாவிகளை அழிப்பதற்காக இல்லை தனி நபர் கொலையில் சிறு குழு தாக்குதலில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை அப்பாவி சிங்களவன் எவனும் எங்களுக்கு எதிரி இல்லை

### படை பலம்

சிங்களப்படையில்28ஆயிரம் பேர் இருக்கிறார்கள் எங்கள் இயக்கத்தில் 6ஆயிரம் பேர் மற்றும் உள்ள

2-ம் பக்கம் பார்க்க

NEWS

தமிழ்சுடர்

அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்தெறிவோம்

PEOPLES LIBERATION ORGANIZATION

THAMILEELAM


தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

DEMOLISH ALL REPRESSION

P.L.O.T

www.tamilarangam.net





தமிழ் ஈழ விடுதலை போராட்ட தளபதி முகுந்தன் என்ற உமாமகேசுவரன் இன்று பெங்களூரில் நிருபர்களுக்கு பேட்டி அளித்த போது எடுத்த படம் இடம் இருந்து 4வதாக இருப்பவர் முகுந்தன் மற்றவர்கள் நாகலிங்கம் சேலிகந்தப்பா வாசுதேவன் செந்தில் ஆகியோர் படம்-பாபுராஜ்

# இந்திய ராணுவம் தேவை இல்லை....

— 1ம்-பக்க தொடர்ச்சி —

விடுதலை இயக்கங்களில் 4 ஆயிரம்பேர் ஆகமொத்தம் 10ஆயிரம்பேர் பயிற்சி பெற்ற படைவீரர்கள்உள்ளனர்:

இவர்களில் பெரும்பாலோர் இலங்கை காடுகளில் பயிற்சி பெற்றவர்கள் மீதிப் பேர் வெளிநாடுகளில் பயின்றவர்கள் எந்த சூழ்நிலையிலும் தாங்கள் சக்தியுள்ள ஆயுதத்தை தவறுக பயன் படுத்த மாட்டார்கள் அரசியல் தெளிவும் சிந்தனை ஆற்றலும் செயல் ஆற்றலும் இவர்களுக்கு பயிற்சியாக அளிக்கப்படுகிறது இது தான் எங்கள் பலம்எங்கள் போராளிகள் ஒவ்வொருவனும் எதற்காக போராடுகிறோம் என்பதை உணர்ந்தவன் சிங்கள ராணுவ பலத்தோடு ஒப்பிடுகிற போது எங்கள் படை சிறியது தான் அவர்கள் வைத்திருக்கும் படைக்கலன்களோடு ஒப்பிட்டால் எங்களிடம் ஆயுதமும் குறைவாகத்தான் இருக்கிறது என்றாலும் அது கூலிப் படை இது கொள்கைப் படை எனவே எங்களால் தமிழ்ஈழத்தை வென்றெடுக்கமுடியும்

## விடுதலை இயக்கங்கள்

விடுதலைக்கு போராடுவோர் 6 பிரிவாக இயங்கி வந்தனர் இப்போது ஒன்றுபடும் நேரம் 4 இயக்கங்கள் ஒன்றுகி விட்டன எங்கள் தமிழ் ஈழ மக்கள் விடுதலை கழகமும் தமிழ் ஈழ ராணுவமும் ஒன்றுக இருக்கின்றன நாங்களும் ஒன்றுக இணைய பேச்சுநடத்தி வருகிறோம் விரைவில்ஒன்றுசேருவோம் அப்போது தான் நமது நோக்கத்தை எளிதில் நிறைவேற்றமுடியும் நாங்கள் ஒன்றுபடுவதை ஆட்சியாளர் தடுக்க பார்க்கிறார்கள்

எங்கள் இயக்கத்தைப் பொறுத்தவரையில் தமிழ் ஈழவிடுதலைக்கு ஆதரவாக எந்த சக்தி உருவானாலும் அவற்றை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது தான் அமிர்தலிங்கம் தொண்டமான் யாரானாலும் எங்கள் நோக்கத்தை ஏற்றுக் கொண்டால் சரி அவர்களை நாங்கள் ஏற்றுக் கொள்வோம்

## எங்கள்எல்லை

எங்கள் யுத்தம் எங்கள் பகுதியில் இருக்கக்கூடாது என்பதில் நாங்கள் மிகவும் கண்டிப்பாக இருக்கிறோம் யாழ்ப்பாணத்திற்குள் தாக்குதல் நடத்துவது கூடாது ஒரு சிறிய வெற்றிக்காக தமக்கு பெரிய இழப்புகளை ஏற்படுத்திக் கொள்வது சரிஇல்லை என்பதுதான்எங்கள்வாதம் இதில் தான் விடுதலைப் புலிஇயக்கத்துடன் நாங்கள் வேறுபடுகிறோம்

News

பொதுவாக கொரில்லா போர் முறை எல்லா நாடுகளிலும் வெற்றி பெற்று விடாது இலங்கையை பொறுத்தவரை இரண்டு தேசிய இனங்கள் உள்ளன பூகோள அமைப்பு முறையை வைத்து கணித்தால் இங்கு கொரில்லா போர் வெற்றி பெற வழி இல்லை ஆகவே தான் மக்கள் போர் முழுப்போர்நடத்த வேண்டும் என்கிறோம்

## அனுராதபுரம் தாக்குதல்

விடுதலை போராளிகள் நியாயத்தில் நிற்பவர்கள் அப்பாவிகளை அவர்கள தொடுவதில்லை என்ற நல்ல பெயர் உலகம் முழுவதும் பரவி உள்ளது அந்த பெயருக்கு களங்கம் உண்டாக்கும் வகையில் அனுராதபுரத்தில் சம்பவம் நடந்துள்ளது அப்பாவி சிங்களவர் அங்கே கொல்லப்பட்டிருக்கிறார்கள் அதை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம் இது போன்ற தாக்குதல்கள் நமக்கு பின்னடைவு தான் ஏற்படுத்தும்

உலக நாடுகள் மத்தியில் தமிழ்ஈழவிடுதலை போராட்டம் பற்றிய உண்மைகள் ஓரளவு பரவி வருகிறது தமிழ்ஈழ வானொலி மூலமாகவும் துண்டு பிரசுரங்கள் கொள்கை விளக்க தனிஏடுகள் வாயிலாகவும் எங்கள் போராட்டம்பற்றி உலகுக்கு அறிவித்து வருகிறோம்

இந்திய பத்திரிகைகள் இன்னும் தாராளமாக எங்கள் நியாயங்களை எடுத்துச்சொல்ல வேண்டும் என்று விரும்புகிறோம் இவ்வாறு முகுந்தன் பேட்டியில் குறிப்பிட்டார்

தமிழ்நாடு எந்த வகையில் உங்களுக்கு உதவுகிறது என்ற கேள்விக்கு அவர்கள் அகதிகளை வைத்துபாதுகாக்கிறார்கள் வேறு புலிப்படைக்கு பலற்சி அளிக்கிறார்கள்என் பதெல்லாம் தவறுன தகவல் இந்தியாவில் எங்குமே புலிப்படைக்கு பயிற்சி அளிக்கப்படவில்லை இந்தியா தமிழ் ஈழத்தை அங்கிகரித்தால் போதும் எங்கள் விடுதலையை நாங்களே பார்த்துக் கொள்வோம் என்று முகுந்தன் குறிப்பிட்டார்

முதலில் கர்நாடக தமிழர் முன்னணியை சேர்ந்த குணு ஈழப் போராளிகளை அறிமுகம் செய்து வைத்தார் நாகலிங்கம் சேலிகந்தப்பா வாசுதேவன் செந்தில் ஆகிய விடுதலை போராளிகளும் நிருபர் கேள்விகளுக்கு பதில் அளித்தனர்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

THE TIMES

Bangalore: Friday May 17 1985



Mr Uma Maheswaran, secretary-general of People's Liberation Organisation of Tamil Eelam (extreme right) making a point at a press conference in Bangalore on Thursday. To his right are Mr Vasudevan and Mr Char lie Kandappan, other office-bearers of PLOT.— "Times" photo

# Tamil leader seeks arms aid

By A Staff Reporter

BANGALORE, May 16: "We need material help and arms and not an Indian intervention militarily in Sri Lanka for we can liberate Eelam by ourselves," said Mr Uma Maheswaran, secretary general of the People's Liberation Organisation of Tamil Eelam (PLOT), here today.

He told newsmen that India should recognise the PLOT in the same manner as it had recognised the PLO.

Unity among the various organisations fighting for "liberation" of Eelam in Sri Lanka could not come about due to differences over the strategy, Mr Maheswaran, said.

## UNITY TALKS FAIL

In February-March an attempt was made to bring together the six leading organisations excluding the "Tamil tigers". However, this effort fell through after considerable ground was covered as "some forces broke away from the talks". Later a spokesman of the PLOT said some of the organisations which participated in the unity talks wanted the tigers to be included and "we were not against it".

Mr Maheswaran said his organisation was still for unity as there was no difference of opinion on the need for a separate Tamil Eelam.

Mr Maheswaran said his organisation was against "indiscriminate" attacks on police stations in the Tamil-dominated areas as it was proving to be counter-productive to the cause of separate Eelam. "Through guerilla tactics we can't achieve our aim". The PLOT believed in mass struggle for achievement of separate Eelam and had an army of 8,000 to 9,000. The organisation had nothing against the "ordinary Sinhalese". In fact, "we have support from the left-progressive forces among the Sinhalese."

Replying to a question, he said his army personnel were being trained outside Sri Lanka but not in India. The armed struggle has become inevitable as the Tamils had to be protected from the government "that is using racism to supress us".

## COLONIAL MOVE

The PLOT leader opposed the move of the Sri Lankan government to "colonise" Tamil areas with Sinhalese population."

NEWS TODAY

SATURDAY 18 MAY 1985

Madras

# Hit and run won't help —Uma

Bangalore, May. 18: The General Secretary of the People's Liberation Organisation of Tamileelam (PLOT) G. Umamaheswaran has said that his group believed in a mass armed struggle with the participation of the oppressed workers, peasants and students to get Eelam.

Talking to newsmen here recently Umamaheswaran said that the hit and run attacks against police stations and military convoys by the Tamil partisans might temporarily capture the imagination of the Tamil youth. These guerilla type attack will prove counter-productive in the long run", PLOT leader warned.

He said his organisation, unlike the other groups, believed in holding on to the territory and fighting. "This would enable the Tamil partisans to protect the local population also from the brutal army terror unleashed on them", he said.

"As far as our goal is concerned, the various Tamil groups have no differences.There is no alternative to Eelam", he declared. He said that the Tamils had tried their best to peacefully get their grievances redressed. But all the pacts signed with both Sirimavo Bandaranaike Government and J.R. Jayawardene Government were of no avail. "We are the loser on all occasions", Umamaheswaran said.

When his attention was drawn to the fact that the Sirimavo line to the issue was different from the JR line, Umamaheswaran said "It's only a difference of one of hues. "As for the repression of Tamils, both the Governments were equally ruthless".

Explaining that their struggle was not against the Sinhalese who were themselves oppressed, he said it was against the State terrorism which was destroying the traditional amity between the Sinhalese and the Tamils.

He charged Jayawardene with selling out the country to US imperialists.

PLOT, he said, had 6000 disciplined armed youth, some of them trained outside Lanka. He denied that they were being trained in Tamilnadu or any other part of the India. He said the militant Tamil groups expected material help and arms from India but there was not need for a direct military intervention on the lines of what the Indian army did in Bangladesh.

Umamaheswaran said that the PLOT would continue to work for the unity of all the Tamil groups fighting for a separate state.

NEWS

www.tamilarangam.net

INDIAN EXPRESS
SATURDAY, Madras MAY 18, 1985

# 'Hit and run' attacks not the answer: PLOT

Express News Service

Bangalore, May 17: The People's Liberation Organisation of Tamil Eelam (PLOT) would continue to strive to bring together the Tamil groups fighting for a separate State in Lanka despite the setback to their unity efforts.

The general secretary of PLOT, a major militant Tamil group led by Mr. Uma Maheswaran, told newsmen here on Thursday that the efforts for programmatic unity among the Tamil groups were "spoiled" by certain forces.

"As far as the cause is concerned we have no differences. The question is the strategy to be adopted for the liberation of Tamils", he said.

In February this year six major Tamil militant groups — PLOT, the Liberation Tigers of Tamil Eelam (LTTE) led by Prabhakaran, Sabaratnam's Tamil Eelam Liberation Organisation (TELO), Balakumar's Eelam Revolutionary Organisation (EROS) and Padmanabhan's Eelam People's Liberation Front (EPRLF) met at Madras several times to map out a common programme for the struggle for Eelam. The LTTE later kept out of the talks.

Consequently, a liberation council for Tamil Eelam was formed which even discussed the nature of the polity of future Eelam and the delimitation of Tamil boundaries. The groups were scheduled to meet in the first week of March to approve the programme formally. A couple of days before the talks, PLOT's military secretary was kidnapped stalling the unity efforts. The PLOT leaders who accompanied Mr. Maheswaran, said the real impediment to talks however was the insistence of some groups to keep out the Tamil Eelam Liberation Army (TELA) from the front.

Explaining the differences between the PLOT and other groups, Mr. Umamaheswaran said individualistic terrorist attacks against police stations and military convoys would prove "counter-productive in the long run though they might temporarily sway the emotions of Tamil youth".

As opposed to the "hit and run" attacks of Tiger groups PLOT believed in a mass armed struggle with the participation of the oppressed workers, peasants and students. Guerilla tactics would not bring a separate Tamil nation and it was vital to hold on to the territory and fight. This would enable the activists in protecting the people also from the military attacks, he said.

"There is no alternative to Tamil Eelam, he said. "We tried our best since independence and signed pacts more than thrice with both Mrs. Sirimavo Bandaranaike and Mr. Jayewardene but each time we are the losers". As for the repression of Tamils both the Governments were equally ruthless, he said.

Explaining that their struggle was not against the Sinhalese who were themselves oppressed, he said the armed struggle was against the brute power of the State which was dividing the Sinhalese and Tamilians.

Mr. Jayewardene, he charged, was shamelessly selling out the country to US imperialists. Racism had deeply seeped into the psyche of the Sinhalese and there was no alternative to a separate Tamil nation.

PLOT, he said, had 6000 disciplined armed youth, some of them trained outside Lanka. He denied that they were being trained in Tamil Nadu or in any other part of India. He said the militant Tamil groups expected material help and arms from India but there was no need for a direct military intervention on the lines of what the Indian army did in Bangladesh. The Tamil groups could take on the Sri Lankan army themselves.

PLOT leaders visited Sri Lanka almost every week despite the heavy Lanka naval alert. The leaders very often broadcast their speeches over a transmission centre in the north which they claimed was the most popular all over the Island.

NEWS

INDIAN EXPRESS
Friday May 17 1985
BANGALORE, FRIDAY, MAY 17, 1985

# 'Guerilla warfare won't get Eelam'

Express News Service

Bangalore, May 16: Though guerilla raids on army units played on Tamils' emotions, they are not the right tactics, Mr. Uma Maheshwaran, general secretary of the Peoples' Liberation Organisation of Tamil Eelam (PLOT) said in Banglore on Thursday.

Explaining the differences between PLOT and other groups, Mr. Uma Maheswaran said individualis-



UMA MAHESHWARAN

tic terrorist attacks against police stations and military convoys would prove 'counter-productive' in the long run.

As opposed to the "hit and run" attacks of Tiger groups, PLOT believed in a mass armed struggle with the participation of the oppressed workers, peasants and students. Guerilla tactics would not bring a separate Tamil nation and it was vital to hold on to the territory and fight. This would also protect the people from the military attacks, he said.

Mr. Uma Maheswaran who is in the city to mobilise sympathy for Eelam cause told newsmen without naming any group, that unity efforts were "spoiled" by certain forces. "Unity for what?", he asked. "As far as the cause is concerned we have no differences. The question is the strategy to be adopted for the liberation of Tamils".

In February six major militant groups PLOT, the Liberation Tigers of Tamil Eelam (LTTE) led by Prabhakaran, Sabaratnam's Tamil Eelam Liberation Organisaton (TELO), Balakumar's Eelam Revolutionary Organisaton (EROS) and Padmanabhan's Eelam People's Liberation Front (EPRLF) met at Madras several times to chalk out a common programme for the struggle for Eelam. The LTTE later boycotted the talks.

Consequently, a liberation council for Tamil Eelam was formed which even discussed the nature of the polity of future Eelam and the delineation of Tamil boundaries. The groups were scheduled to meet in the first week of March to formalise the programme. But, a couple of days before the talks, PLOT's military secretary was kidnapped stalling the unity efforts. The PLOT leaders who accompanied Mr. Maheswaran said the real impediment to unity talks however was certain groups insisting on keeping out the Tamil Eelam Liberation Army (TELA) yet another militant group from the front.

Explaining that their struggle was not against Sinhalese who themselves were oppressed, he said the armed struggle was against the State which was dividing the poor Sinhalese and Tamilians. Mr. Jayewardene, he charged, was shamelessly selling out the country to US imperialists. Racism had deeply seeped into the psyche of Sinhalese and there was no alternative but a separate Tamil nation.

PLOT, he said had 6000 disciplined armed youth, some of them trained outside Sri Lanka. He denied that they were being trained in Tamil Nadu nor any other part of India. He said the militant Tamil groups expected material help and arms from India but there was no need for a direct military intervention on the lines of what Indian army did in Bangladesh. The Tamil groups can take on the Sri Lanka army themselves.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்கள் குரல்

NEWS

# இந்தியா ராணுவத்தை அனுப்பத்தேவை இல்லை: முகுந்தன் பேட்டி

## மக்கள் புரட்சியால் தமிழீழம் அடைவோம் என தூளுரை

பெங்களூர், மே. 18: "ஆயுதம் தந்து எங்கள் கரத்தை வலுப்படுத்துங்கள்— சிங்கள சிப்பாய்களை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என்று தமிழீழ மக்கள் விடுதலை கழக செயல் அதிபர் உமா மகேஸ்வரன் (முகுந்தன்) தெரிவித்தார்.

வங்க தேச விடுதலையை இந்திய ராணுவம் பெற்றுத் தந்ததைப் போல, தனித் தமிழ் ஈழம் பெறுவதற்கு இந்திய ராணுவத்தை அனுப்ப வேண்டியதில்லை. எங்களை அங்கீகரித்து உதவி செய்தால், அனைத்து தரப்பு மக்களையும் ஒன்று திரட்டி மக்கள் புரட்சியை உருவாக்கி எங்கள் விடுதலையை நாங்களே பெற்றுக் கொள்வோம் என்றும் முகுந்தன் உறுதியுடன் கூறினார்.

பெங்களூரில் அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். ஒரு சில தமிழீழ விடுதலை இயக்கங்கள் நடத்தி வரும் அதிரடி தாக்குதல், கொரில்லா தாக்குதல் போன்றவைகளை முகுந்தன் ஆதரிக்கவில்லை. இத்தகைய தாக்குதல்கள் எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும் என்று முகுந்தன் சுட்டிக் காட்டினார்.

கொரில்லா தாக்குதல்களால் தமிழ் ஈழத்தை பெற்று விட முடியாது. ஒடுக்கப்பட்ட அனைத்து தொழிலாளர்களையும், விவசாயிகள், பாட்டாளிகள், மாணவர்கள், இளைஞர்கள் என்று அனைத்து தரப்பினரையும் ஒன்று திரட்டி பெருமளவில் மக்கள் புரட்சியை ஏற்படுத்துவதன் மூலம் தமிழீழத்தை பெற முடியும் என்பதில் தான் தமது இயக்கம் நம்பிக்கை கொண்டிருக்கிறது என்றும் முகுந்தன் தெளிவுபடுத்தினார்.

### 6 ஆயிரம் பேர் கொண்ட படை தயார்

தமிழீழமக்கள் விடுதலைக் கழகம் ஏற்கனவே 6 ஆயிரம் பேர் கொண்ட படை திரட்டியிருக்கிறது. கட்டுப்பாடுமிக்க இளைஞர்கள் இதில் உள்ளனர். அவர்களில் பலர் வெளிநாடுகளில் பயிற்சி பெற்றவர்கள் என்றும் முகுந்தன் கூறினார். தமிழ் நாட்டிலோ அல்லது இந்தியாவின் வேறு எந்த பகுதியிலோ இவர்கள் பயிற்சி பெறவில்லை என்பதையும் அவர் தெளிவுபடுத்தினார்.

### தமிழீழம் ஒன்றே வழி

இலங்கையில் தனித் தமிழீழம் கிடைப்பது ஒன்றே இலங்கை தமிழர் பிரச்சினைக்கு தீர்வாக அமையும் என்பதையும் அவர் உறுதிபட கூறினார். இலங்கை சுதந்திரம் அடைந்ததற்கு பிறகு அமைந்த எல்லா அரசுகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி, பல உடன்பாடுகள் ஏற்பட்டு இருக்கின்றன. அந்தகைய உடன்பாடுகளினால் தமிழர்களுக்கு எவ்விதத்திலும் பலன் ஏற்படவில்லை: அவர்களுக்கு உரிமை கிடைக்கவில்லை என்றும் முகுந்தன் சுட்டிக் காட்டினார்.

இப்போது நடந்து வரும் போராட்டம் சிங்கள மக்களை எதிர்த்து அல்ல என்பதையும் முகுந்தன் தெளிவுபடுத்தினார்.

உமா மகேஸ்வரன் விளக்கம்

# இலங்கை விடுதலை அமைப்புகள் இணைய முடியாதது ஏன்?

பெங்களூர், மே 17— இலங்கையில் சுயாட்சி வேண்டிப் போராடும் தமிழ்ப் போராளிகள் தனித்தனியாக கொரில்லா தாக்குதலில் ஈடுபடுவதை விட, ஒருங்கிணைந்து போராடுவதையே தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் விரும்புகிறதாக அதன் பொதுச் செயலாளர் உமா மகேஸ்வரன் இன்று கூறினார்.

பெங்களூரில் பொதுக் கூட்டம் ஒன்றில் அவர் பேசினார்.

போராட்டத் திட்டங்கள் வேறுபடுவதால் எல்லா போராளிகளும் இணைய முடியவில்லை. சென்ற பிப்ரவரியில் விடுதலைப் புலிகளை தவிர்த்து உள்ள மற்ற 6 அமைப்புகள் பேச்சு வார்த்தை நடத்தின. இணைந்து போராடுவதற்காக ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட்ட சமயத்தில் சில அமைப்புகள் பிரிந்து சென்று விட்டன என்று அவர் கூறினார்.

எங்கள் அமைப்பு இன்னமும் ஒற்றுமையையே விரும்புகிறது. இலங்கைப் பிரச்னையில் இந்திய ராணுவம் தலையிடும் என்று நாங்கள் நினைக்கவில்லை. எங்களை நாங்களே விடுவித்துக் கொள்வோம்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை அங்கீகரித்திருப்பதைப் போல தமிழீழ மக்கள் விடுதலை இயக்கத்தையும் இந்தியா அங்கீகரிக்க வேண்டுமென்றார் உமா மகேஸ்வரன்.

தந்திரங்களால் விடுதலையை வென்று விட முடியாது. ஏராளமானோர் போராடினால்தான் அது கிடைக்கும். எங்கள் போராளிகள் இலங்கைக்கு வெளியில் இருந்துதான் பயிற்சி பெற்று வருகின்றனர். ஆனால் அவர்கள் பயிற்சி பெறுவது இந்தியாவில் அல்ல என்றார் அவர்.

எங்களின் உண்மையான எதிரி சிங்கள ராணுவம் அல்ல. அரசை தீவிரமாக ஆதரித்து வரும் இஸ்ரேல், பிரிட்டிஷ் அமெரிக்கா ஆகிய அந்நியசக்திகளே எங்கள் எதிரிகள். இலங்கை பிரச்னை மனித உரிமைகளோடு தொடர்புடையதென்று கூறிய உமாமகேஸ்வரன் மாநில சட்டமன்றங்களை நோக்கி ஊர்வலங்கள் நடத்தி விடுதலை இயக்கங்களை இந்திய அரசு அங்கீகரிக்குமாறு செய்யுங்கள் என்று மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

தினமலர் சனி மே 18 1985

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

★ தமிழ், சிங்கள ஏழை மக்கள் ஒன்றாதல் கண்டு ஆளும் வர்க்கத்துக்கு கதி கலக்கம்
★ இரு இனங்களையும் பிரித்தாள பயங்கர சூழ்ச்சி ★ மொசாத், சி.ஐ.ஏ.-வின் கைப்பாவை ஜெயவர்த்தனா அரசு ஆடும் வெறியாட்டம் ★ ஈழ விடுதலை இயக்கத்தினருக்கு உழைக்கும் சாதாரண சிங்கள மக்கள் பகைவர்கள் அல்ல

# உமாமகேஸ்வரன் எச்சரிக்கை!

NEWS

சென்னை, மே. 16 —

**70 சிங்களர் படுகொலை மற்றும் 100 பேர் காயமடைந்தது குறித்து தமிழக மக்கள் விடுதலைக் கழகப் பொதுச் செயலாளர் உமாமகேஸ்வரன் விடுத்துள்ள கண்டன அறிக்கை வருமாறு:**

ஸ்ரீலங்கா அரசு தமிழ்போராளிகள் தாக்குதல் நடத்தி 70 சிங்களவர்களைக் கொன்றுவிட்டதாகவும், 100 சிங்களரைக் காயமுறச்செய்துவிட்டதாகவும் அறிவித்திருப்பதைக் கேட்டு தமிழக மக்கள் விடுதலைக் கழகம் அவ நம்பிக்கையும் அதிர்ச்சியும் துயரமும் அடைந்துள்ளது.

தமிழ் போராளிகள் காலை 8 மணிக்கு அனுராதபுரம் பேருந்து நிலையத்தை வந்தடைந்து துப்பாக்கிச் சூடு நடத்தி சாதாரணக் குடிமக்கள் பலரைக் கொன்றுவிட்டதாகவும் பலரைக் காயப்படுத்தி விட்டதாகவும் ஸ்ரீலங்கா ஒலிபரப்பு கூட்டுத் ஸ்தாபனம் ஆசிய சேவை செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது. பின்னர் அங்கிருந்து கிளம்பிச் செல்கையில் போராளிகள் அனுராதபுரம் மாவட்டத்தில் வேறு இடத்திலும் துப்பாக்கிச் சூடு நடத்தி சாதாரணக் குடிமக்கள் பலரைக் கொன்றதாகவும் பலரைக்காயப் படுத்தியதாகவும் சொல்லப் படுகிறது.

வில்பட்டில் போராளிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் பலர் காயமுற்றதாகவும், சொல்லப்படுகிறது. புட்டலம் சாலை வழியே செல்கையில் போராளிகள் நொச்சியாகம காவல் நிலையத்தைத் தாக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் கான்ஸ்டபிள் ஒருவர் படுகாயமடைந்ததாகவும் ஸ்ரீலங்கா ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாபன செய்தி அறிக்கைக் கூறுகிறது.

நிராயுதபாணிகளை சாதாரணக் குடிமக்கள் அவர்கள் சிங்களவராக இருந்தாலும் சரி, தமிழர்களாக இருந்தாலும் சரி (—) மீது நடத்திருக்கும் பயங்கரவாதத் தாக்குதலைத் தமிழக மக்கள் விடுதலை கழகம் (தமவிக)மிக மிக வன்மையாக கண்டித்திருக்கிறது. இந்த பயங்கரவாதத் தாக்குதலில் மாண்டோர் மற்றும் காயமுற்றோரின் சுற்றத்தாருக்கும் நண்பர்களுக்கும் தமவிக அனுபதாபத்தைத் தெரிவித்து கொள்கிறது.

சாதாரண ஏழை எளிய சிங்கள மக்கள் தமிழர்களின் பகைவர்கள் அல்ல என்பதை த.ம.வி. கழகம் வலியுறுத்துகிறது. சிங்கள ஏழை எளியவர்களும் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் ஒரு பகுதியே என்பதனால், அவர்களை ஒடுக்கப்பட்ட தமிழர்களின் நண்பர்கள் என்றே த ம வி கழகம் கருதுகிறது.

இரு சமூகங்களையும்சேர்ந்த ஒடுக்கப்பட்ட மக்கள் ஒன்று சேர்வது கண்டு அந்த நற்றுமை தங்களுடைய ஆதிக்கம் நீடிப்பதற்கு ஓர் அபாயம் எனக் கண்டுகொண்ட பிற்போக்குவாதிகளின் சதியால் தான் இந்த பயங்கர பாதகம் நடந்துள்ளது. ஒடுக்கப்பட்ட மக்கள் ஒன்று கூடும் அபாயத்தைக் கண்டகொண்ட ஏகாதிபத்தியக் கைக்கூலிகளும் உள்நாட்டு எடுபிடிகளும், மதம் மற்றும் மொழியின் பேரால் ஒடுக்கப்பட்ட மக்களிடையே பகைமை மூட்டும் நோக்கத்துடன் இப்போது ஒரு கடைசி முயற்சியாக இத்தகைய பாதகச் செயல்களில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

சாதாரணக் குடி மக்கள் மீது தாக்குதல் என்பதை த ம வி கழகம் எப்போதுமே கண்டித்து வந்துள்ளது. தவறான வழிகாட்டுதல்களினால் தமிழ் போராளிகள் குழு ஒன்று (தமிழீழ விடுதலை புலிகள் எல்.டி.டி.ஈ.) நயாருவிலும் கொக்குலையிலும் சாதாரண மக்களைத் தாக்கிப்படுகொலை புரிந்ததை த.ம.வி. கழகம் கண்டிக்கத் தயங்கவில்லை.

இப்போது நடந்திருக்கும் இந்தப் படுகொலைக்கும் த.ம.வி. கழகம் தயவு தாட்சண்யம் இன்றித் தனது கண்டனத்தை தெரிவிக்கிறது. தமிழர் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அனைத்துக் குழுக்களையும் இத்தகைய செயல்களில் ஈடுபட வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறது. இத்தகைய செயல்கள் தம் நாட்டு விடுதலைக்கு எவ்விதத்திலும் உதவாதுமாறாக, இவை தொழிலாளி வர்க்கத்திடையே குழப்பத்தை உண்டுபண்ணும்; முற்போக்கான, புரட்சிகரமான சிங்களர்கள், மக்களுக்கும் அவர்களுடைய முன்னணிப் படையினரான தொழிலாளி வர்க்கத்துக்கும் தமிழர்களின் கோரிக்கையைப் புரிய வைக்கும் பணியையும் இது தடை செய்யும்.

தங்கள் பொது விரோதியை அடையாளம்காணத்தொடங்கியுள்ள இரு இனங்களுக்கும் இடையே பகைமையையும் அச்சத்தையும் உண்டு பண்ணுவதற்காக இந்தத் தாக்குதலை அரசுப் படைகளே நடத்தியிருக்கக்கூடிய வலுவான சாத்தியக் கூறும் உள்ளது என்பதைச் சுட்டிக்காட்டாவிட்டால் த ம வி கழகம் அதன் கடமையில் தவறிவிட்டதாகும்.

தமிழர் முஸ்லிம் மோதல்களையும் அரசாங்கமேதான் நடைபெறச் செய்தது என்பது அம்பலமாகி வருகிறது. ஆட்சியினருக்கும் அமைச்சர்களின் அறிக்கைகளே அதை நிருபித்துள்ளன. சமீபத்திய தமிழர் முஸ்லிம் மோதல் பற்றிய இந்திய அயல் துறை அமைச்சரின் அறிக்கை முற்றிலும் சரியே

என்று இலங்கையின் முன்னாள் கல்வி அமைச்சர் பதியுதின் முகமது போன்றவர்களும் சமீபத்தில் அறிவித்துள்ளனர். மேலும் கொழும்பு முஸ்லிம்கள் நியமித்த ஒரு நபர் கமிஷன், தமிழர் முஸ்லிம் மோதலைத் தூண்டிவிட்டதிலும், தொடரச் செய்ததிலும் அரசாங்கத்துக்குச் சம்பந்தம் உண்டு என்று குற்றஞ் சாட்டியுள்ளது.

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமாக முற்றிவிட்ட விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு ஜெயவர்த்தனே அரசு முழுக்க முழுக்க அதனுடைய ஆலோசகர்களான மொசாத் மற்றும் சிஐஏ வையே நம்பியிருக்கிறது. நிகாரகுவா எதிர்புரட்சியாளர்களுக்கு அமெரிக்கா வழங்கியகொலைத் திட்டங்களில் சாதாரண குடிமக்களைத் தாக்கிப்படுகொலை புரிவது போன்ற நாங்கெட்ட தந்திரங்களுக்கு முதலிடம் உண்டு. அரபு நாடுகளில் உள்ள யூத மக்களை இஸ்ரேலுக்குக் குடிபெயரும்படி நிர்ப்பந்திப்பதற்காக இஸ்ரேலும் இவ்வகைத் தந்திரத்தைக் கையாள்கிறது.

இந்தப் படுகொலைக்குக் கண்டனம் தெரிவிக்கும் அதே நேரத்தில் ஏகாதிபத்தியக் கைக்கூலிகள் மற்றும் ஏகாதிபத்தியத்தின் உள்நாட்டு, எடுபிடிகளின் இந்தச் செயல்களைக் கண்டு அயர்ந்துவிட வேண்டாம் என்று த ம வி கழகம் சிங்கள மக்களைக் கேட்டுக் கொள்கிறது.

சிங்கள மக்கள் தமிழர்களின் பகைவர்கள் அல்ல என்பதை த.ம.வி. கழகம் மீண்டும் வலியுறுத்துகிறது மக்களிடையே பிளவு உண்டு பண்ணி, என்றென்றும் அவர்களை உரிமையற்றவர்களாக வைத்திருக்கக் கருதும் பாசிஸ்டுகளையும், உள்நாட்டு கூட்டாளிகளையும் முறியடிப்பதற்கு அனைத்துப் பிரிவுகளையும் சேர்ந்த மக்கள் ஒன்றுபட வேண்டும் என்றும் தமவி கழகம் அறைகூவல் விடுக்கிறது.

17—5—85 வெள்ளி

www.tamilarangam.net



ஜனசக்தி

சென்னை 18—5—85 சனி

# தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தை (பிளாட்) தொடர்ந்து ஏனைய ஈழவிடுதலை அமைப்புகளும்

# சிங்களர் படுகொலைக்குக் கண்டனம்

## நான்கு ஈழ விடுதலை அமைப்புகள் கூட்டறிக்கை

சென்னை, மே 18—

இலங்கை அனுராதபுரத்தில் உள்ள அப்பாவி சிங்களப் பொது மக்கள் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டது கண்டிக்கத்தக்கது என்றும் உழைக்கும் சிங்கள மக்கள் உரிமை கோரி போராடும் தமிழ் இன மக்களுக்கு ஆதரவான சக்திகள் என்றும் தமிழ்ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (plot) செயலதிபர் உமா மகேஸ்வரன் ஒரு கண்டன அறிக்கை வெளியிட்டு இருந்தார்,

### வழிகாட்டுதலை ஒட்டி

அதனைத் தொடர்ந்து அவரது வழிகாட்டுதலை ஒட்டி ஈழம் புரட்சிகர அமைப்பு, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ் ஈழ விடுதலை இயக்கம், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் ஆகிய நான்கு அமைப்புகளும் அச்செயலுக்கும் எங்கள் அமைப்புகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றும் வன்மையாக கண்டிக்கிறோம் என்றும் அறிக்கை விட்டுள்ளனர். அதன் விவரம் வருமாறு:

### வன்மையாகக் கண்டிக்கிறோம்

இலங்கை அனுராதபுரத்தில் சிங்கள பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டதற்கும் எங்கள் அமைப்புகளின் ஆயுதப்படை பிரிவுகளுக்கும் சம்பந்தம் இல்லை. இறந்த காயமடைந்த சிங்களர்களுக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அனுராதபுரத்தில் நடந்த சிந்தனை அற்ற வன்முறைச் செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

### ஆயுதமேந்தியப் போராட்டம்

நாங்கள் இலங்கை அரசையும் பகுதிகளை ஆக்ரமித்துக் கொண்டு தமிழர்களைக் கொன்று குவித்து வரும் இலங்கை ராணுவத்தையும் போலீசாரையும் எதிர்த்து ஆயுதமேந்திப் போராட்டம் நடத்தி வருகிறோம்.

### புரட்சிகர கூட்டாளிகள்

சிங்கள நாட்டின் உழைக்கும் மக்கள்மீது எங்களுக்கு எப்பொழுதும் அனுதாபம் உண்டு. ஏனெனில் இலங்கை சர்வாதிகார அரசை எதிர்த்து நடைபெறும் போராட்டத்தில் அவர்கள் எங்களது புரட்சிகரக் கூட்டாளிகள்

### அப்பாவித் தமிழர்களை

ஈழ விடுதலை இயக்கங்களின் ஆயுத மேந்திய போராட்டத்திற்கு எதிர் விளைவாக ஒன்றுமறியாத அப்பாவித் தமிழர்களை இலங்கை அரசு கொன்று குவித்து வருகிறது.

### ஒட்டுமொத்த படுகொலை

ஒவ்வொருமுறை கொரில்லாத் தாக்குதல் நடந்த பிறகும் காட்டுமிராண்டித்தனமாக அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள். இப்படி ஒட்டுமொத்தமாக ஒரு சமுதாயத்திற்கு தண்டனை வழங்கும் போக்கிற்கு நிரந்தரமான சாட்சியாக ஜூலைப் படுகொலைகள் இடம்பெற்றன.

### தாங்கமுடியாத கூட்டுக் கொலை

கடந்த சில வாரங்களாக இந்தக் கூட்டுக் கொலைகள் தாங்க முடியாத நிலையை எட்டி உள்ளன.

### பாசிச அரசு

தமிழர்கள் அனைவரையும் கொன்று இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ராணுவத் தீர்வு காண இலங்கை பாசிச அரசு நினைக்கிறது.

### உள்நாட்டுப் போர்

சிங்களர்களையும் தமிழர்களையும் பேரழிவுக்கு உள்நாட்டுப் போரில் தள்ளிவிட இலங்கை பாசிச அரசு செயல்பட்டு வருகிறது.

### கடும் எச்சரிக்கை

ஒட்டு மொத்தமாக தமிழ்ச் சமுதாயத்தைக் கொன்று குவிக்கும் போக்கை இலங்கை அரசு தொடர்ந்து கடைப்பிடித்தால் வன்முறை மேலும் வெடிப்பதற்கு நாங்கள் பொறுப்பாக இயலாது.

### சூழ்ச்சிக்கு இரையாகாதீர்

தமிழினத்தை முற்றாக அழிக்க நினைக்கும் இலங்கை அரசின் பேரினவாதச் சூழ்ச்சிக்கு இரையாக வேண்டாம் என்று சிங்கள மக்களைக் கேட்டுக் கொள்கிறோம்

மேற்கண்டவாறு அக்கூட்டறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

TODAY
Special
NEWS

www.tamilarangam.net

"ஏகாதிபத்திய ஏவல்நாய்களின் எதிர்ப்பிரச்சாரம் தமிழீழப் புரட்சியை மழுங்கடித்துவிட முடியாது!"


# THE GUARDIAN

— 12-04-85 —

**From Eric Silver in Colombo**

Two Tamil organisations — the main political party, the Tamil United Liberation Front (Tulf) and the Communist People's Liberation Organisations of Tamil Eelam — are thought to be ready for talks, but the attitude of the many guerrillas bands is still uncertain.

"கடந்த 12.4.85 வெள்ளிக்கிழமை அன்று லண்டனில் THE GUARDIAN என்னும் பத்திரிகையில் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் சேர்ந்து ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தைக்கு செல்லவிருப்பதாக வெளிவந்த, மேற் குறிப்பிட்ட செய்தியில் எவ்வித உண்மையும் இல்லையென்பதை அறியத் தருகின்றோம்!"




★ புரட்சி வெல்வோம் ! உயர்ச்சி கொள்வோம் ! ★

வெளியீடு: செய்தி-மக்கள் தொடர்புப்பிரிவு, தமிழீழ மக்கள் விடுதலை கழகம். (பிரான்ஸ் கிளை)

PEOPLE'S LIBERATION ORGANIZOTION OF THAMILEELAM (FRANCE BRANCH)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்